

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2026) சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் இல.பத்மநாபன் அவர்களின் மகள் ப.ரஷியா – பெ.வினோத்குமார் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, திருப்பூர் மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்கள் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டில் ரயில் நிலையங்களை எப்போது மறுசீரமைக்கப் போகின்றீர்கள்?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.13-

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்களை மறுசீரமைப்பதற்கு தெற்கு ரயில்வே மேற்கொண்டு வரும் பணிகளின் தற்போதைய நிலை என்ன என்றும் ரயில் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பது உள்ளிட்ட பல கேள்விகளை மக்களவையில், ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு திமுக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

அம்ரித் பாரத் ரயில் நிலையத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, நாடு முழுவதும் மறு சீரமைப்புப் பணிகளுக்காக கண்டறியப்பட்ட மொத்த ரயில் நிலையங்களின் எண்ணிக்கை



எவ்வளவு? ஜனவரி 1, 2026 அன்றைய நிலவரப்படி, பணிகள் நிறைவடைந்த ரயில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

மேலும் இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்களை மறுசீரமைக்கும் பணிகளை தெற்கு ரயில்வே மேற்கொண்டு வருகிறதா? அப்படியானால், எத்தனை ரயில் நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் நடந்து வருகிறது? அப்பணிகளின் தற்போதைய நிலை என்ன?

சென்னை பூங்கா, கிண்டி, சென்னை கடற்கரை மற்றும் கூடுவாஞ்சேரி ஆகிய ரயில் நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்கள் மற்றும் மீதமுள்ள ரயில் நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் எப்போது நிறைவடையும்?

இத்திட்டத்தின்கீழ் பயணிகளுக்கான மின்தூக்கிகள் (Lifts), நகரும் படிக்கட்டுகள் (Escalators), கழிப்பறைகள், மேம்படுத்தப்பட்ட நடைமேடைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கான வசதிகள் மேலும் அவர்கள் சென்று சேர வேண்டிய பகுதிகளுக்கான இணைப்பு வசதி உள்ளிட்ட வசதிகள் குறித்த விவரங்கள் யாவை?

இந்தத் திட்டத்தின்கீழ் மாநிலம் மற்றும் மண்டல வாரியாக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் என்ன?

மறுசீரமைப்பு தொடர்பான கட்டுமானப் பணிகளின்போது வாகன நிறுத்தும் இடத்தின் பற்றாக்குறை மற்றும் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் போன்ற பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால், அவற்றை சரி செய்வதற்கும், திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதை உறுதி செய்வதற்கும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

## தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள “நான் முதல்வன்” திட்டம் போன்று

# வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு விரிவான திட்டத்தை ஒன்றிய அரசு வடிவமைக்க வேண்டும்!

## மக்களவையில் – கிரிராஜன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப்.13

நாடளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ள திமுக எம்.பி. இரா. கிரிராஜன், பூஜ்ய நேரத்தில் உரையாற்றினார். அவரது உரையில், இந்தியா இளைஞர்கள் மற்றும் படித்த தனிநபர்களிடையே அதிக அளவிலான வேலையின்மை பிரச்சினையால் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், நகர்ப்புற வேலையின்மை 9 சதவீதத்தை எட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதற்கான முக்கிய காரணங்களாக கல்விக்கும் தொழில்துறைக்கும் இடையிலான பொருந்தாதன்மை, மக்கள்தொகை வளர்ச்சியில் வேகம், மந்தமான உற்பத்தித் துறை, தரமில்லாத வேலைகளில் மில்லியன் கணக்கானவர்கள் தள்ளப்படுதல், முறைசாரா வேலைகளுக்குத் தள்ளுதல் ஆகியவை இருப்பதாகவும், போட்டி மிகுந்த துறைகளில் தங்கள் இடத்தைக் எட்டுவதில் இளைஞர்கள் சவால்களையும், போராட்டங்களையும் எதிர்கொள்கின்றனர் என சுட்டிக்காட்டினார்.

சிறந்த கல்வி மற்றும் நல்ல கல்வித் தரங்களைக் கொண்டிருந்தாலும், சில நேரங்களில் வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிவகுக்காமல், மாணவர்களும் இளைஞர்களும் தங்களுக்கான வேலையை அடைவதில் ஏதாவது சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கவலை தெரிவித்தார்.



பொருளாதார வளர்ச்சியும், வேலையின்மையும் அதிகரித்து வருவதோடு கொள்கைகளின் செயல்திறன், பணியாளர்களின் தயார்நிலை, தொழிலாளர் சந்தையில் உள்ள கட்டமைப்பு இடைவெளிகள் ஆகியவை பெருங்கேள்விகளை எழுப்புவதாகவும், இந்த பொருந்தமின்மையால் இளைஞர்கள் திடீர் பாதிப்புக்கு உள்ளாவதாகவும், எனவே வேலையின்மையின் உடனடி கவலைகளை நிவர்த்தி செய்து உள்ளடக்கிய வளர்ச்சிக்கான நிலையான பாதையை வகுக்க வேண்டும் என்று திமுக எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு கிரிராஜன் வலியுறுத்தியுள்ளார்.

## தொலைநோக்கு இல்லாமல் செயல்படுகிறது ஒன்றிய அரசு!

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்சாரத் திட்டத்தில் தொடரும் குளறுபடிகள்!

## மக்களவையில் – கே.இ.பிரகாஷ் கண்டனம்!

புதுடெல்லி, பிப். 13-

“2030 ஆண்டுக்குள் 500GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்சாரத்தை பயன்பாட்டுக்கு கொண்டுவருவோம்” என்று அறிவித்து, 2023ம் ஆண்டு திட்டங்களை கொண்டுவந்தது ஒன்றிய அரசு. இந்த நிலையில், இத்திட்டத்தில் செயல்படுத்தப்படும் டெண்டர் நடைமுறைகள், இது வரை எவ்வளவு மின்சாரம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது என்பது குறித்து, நாடாளுமன்றத்தில் ஈரோடு மக்களவையில் உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஒன்றிய அரசிடம் கேள்விகளை முன்வைத்தார்.

இதற்கு கிடைத்துள்ள பதில்கள், ஒன்றிய அரசு தொலைநோக்கு இல்லாமலும், போதிய நிர்வாக வேகம் இல்லாமலும் பல்வேறு குளறுபடிகளை செய்து வருவதை அம்பலமாக்கியுள்ளது.

**சொதப்பிய ஆண்டு இலக்குகள்:**

ஒன்றிய அரசு தன்னுடைய பதிலில், “2030-க்குள் 500GW அளவுக்கு புதுபிக்கத்தக்க எரிசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்” என்ற தனது இலக்கை மீண்டும் உறுதிசெய்துள்ளது. ஆனால், நடைமுறையில் இந்த இலக்கை நோக்கிய பயணத்தில் பல்வேறு சொதப்பல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

2023ம் ஆண்டும், 2024ம் ஆண்டும் அறிவித்தபடி தலா



50GW அளவுக்கு டெண்டர்களை விட்ட ஒன்றிய அரசு, 2025ம் ஆண்டு வெறும் 15GW அளவுக்கே விட்டுள்ளது. இது மிகப்பெரிய நிர்வாகப் பின்னடைவு.

ஆனால், இந்தப் பின்னடைவை வெளிக்காட்டிக்கொள்ள பயந்து, தற்போது ஆண்டுக்கு 50GW என்ற இலக்கை நிறுத்திக்கொண்டு, Demand Based முறைக்கு மாறுகிறோம் என்று கூறியுள்ளது.

**24GW–க்கு மட்டும் தான் ஒப்பந்தம்:**

ஒன்றிய அரசு தன்னுடைய பதிலில் தெளிவாக, 31 டிசம்பர் 2025 வரை, 24GW அளவுக்கு மட்டுமே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்சாரத்திற்கான விற்பனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்று கூறியுள்ளது. இது மொத்த இலக்கில் வெறும் 5% கூட இல்லை.

இப்படி 24GW அளவு மட்டுமே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றால், அதற்கு இன்னொரு அர்த்தம் மிகப்பெரிய Backlog ஏற்பட்டுள்ளது என்பது. ஆனால், அதைப்பற்றி எதுவும் சொல்லாமல் மறைத்திருக்கிறது ஒன்றிய அரசு.

**போதிய உட்கட்டமைப்பு இல்லை!**

ஒன்றிய அரசு தனது பதிலில் 2032ம் ஆண்டுக்குள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்சாரத்திற்கான உட்கட்டமைப்புகள் (Transmission lines Sub stations) உருவாகி விடும் என்று கூறியுள்ளது.

இதுவும் நடைமுறையில் வேறாக இருக்கும் நிலையே. 2025-26 நிதியாண்டின் முதல் 9 மாதங்களில் 10,696 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்கடத்திப் பாதைகள் அமைக்க இலக்கு வைக்கப் பட்டது. ஆனால் வெறும் 5,077 கிலோ மீட்டர் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. இது வெறும் 47% மட்டுமே.

இப்படிப்பட்ட நிலையில், இலக்கு ஆண்டை மட்டும் பெரிதாக காட்டி நாடகமாடுகிறது ஒன்றிய அரசு.

**ஆய்வுகள் இல்லாததால் திடீர் மாற்றங்கள்:**

இந்த திட்டம் குறித்து முன்பாகவே எந்த முறையான ஆய்வுகளையும் ஒன்றிய அரசு மேற்கொள்ளவில்லை என்பது, பதில்களில் உறுதியாகியுள்ளது.

ஆரம்பத்தில் Plain solar என்று டெண்டர் விட்டு, பின்பு அதற்கு Demand இல்லை என்பதை புரிந்துகொண்டு, Solar with energy storage முறைக்கு ஒன்றிய அரசு மாறியிருக்கிறது.

முன்கூட்டியே ஆய்வுகள் நடத்தியிருந்தால் இதுபோன்ற விளைவுகளை தவிர்த்திருக்கலாம். ஆனால் ஏன் ஆய்வுகள் நடத்தவில்லை?

**மாநிலங்களை நெருக்கும் ஒன்றிய அரசு!**

இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்சாரத்தை வாங்குமாறு மாநிலங்களை வலியுறுத்தி வருகிறோம் என்று ஒன்றிய அரசு கூறியுள்ளது.

24 இது மாநிலங்களின் நிலையை புரிந்துகொள்ளாத எதேச்சதிகாரப் போக்கே. ஒன்றிய அரசின் நிதி தாமதங்கள் மற்றும் முந்தைய மின்சார ஒப்பந்தங்களில் மாநிலங்கள் கட்டுண்டு இருக்கின்றன. மேலும், மாநிலங்களுக்கு மணிநேரமும் மின்சாரம் வழங்கும் வகையிலும், புதுப்பிக்கதக்க எரிசக்தி மின்சாரத்தை ஒன்றிய அரசு மேம்படுத்தவில்லை.

இந்த நிலையில், மாநிலங்களை நெருக்கி அதை வாங்க வைக்க முயல்வது ஏற்றுக் கொள்ள முடியாதது மற்றும் கூட்டாட்சியையும் சிதைப்பது.

மொத்தத்தில், விளம்பரத்திற்காக ஆய்வுகள் எதுவுமே இன்றி ‘500GW’ என்று அறிவித்த ஒன்றிய அரசு, தற்போது தன்னுடைய சொதப்பல்களால் விழிப் பிதுங்கி நிற்கிறது. ஆண்டு இலக்கை குறைப்பது, Back log-யை மறைப்பது, மாநிலங்களை நெருக்குவது எனப் பல செயல்களை செய்துகொண்டிருக்கிறது.

இந்த விவகாரத்தில், ஒன்றிய அரசு உடனடியாக வெள்ளை அறிக்கை வெளியிட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தனது கண்டனத்தை தெரிவித்திருந்தார்.




சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி பேரூர் தி.மு.க. சார்பாக பொது உறுப்பினர் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூர் செயலாளர் சு. பாலமுருகன் வரவேற்புரையாற்றினார். பேரூர் பொருளாளர் இரா. மூர்த்தி தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, ஒன்றிய செயலாளர் சித்தார்த்தன், முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் காமராஜ், அகிலன், பேரூராட்சி தலைவர் லோகாம்பாள் மற்றும் பேரூர் நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் செல்வகிளிண்டன் நன்றியுரையாற்றினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 14.02.2026 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் மதுரை ஐடா ஸ்கட்டர் அரங்கத்தில் (Ida Scudder Auditorium), நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 11-02-2026

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## ஆடை தயாரிப்பாளர்கள் தங்களது ஏற்றுமதியில் சந்தித்து வரும்

# இன்னல்களை தடுத்திட அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

## மாநிலங்களவையில், எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி,பிப்.13-

திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் 06 பிப்ரவரி 2026 அன்று மாநிலங்களவையில், ஐரோப்பிய நாடுகள், பங்களாதேஷ், வியட்நாம், துருக்கி போன்ற நாடுகள், வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தங்களை மேற்கொண்டிருப்பதால், இந்திய ஆடை தயாரிப்பாளர்கள் ஏற்றுமதியில் சந்தித்து வரும் இன்னல்களை ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும், அவர்களின் துயரைக் களைந்திட அரசிடம் ஏதேனும் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளதா? என்றும், ஐரோப்பிய யூனியனுடன், வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்



திட்டம் ஏதும் உள்ளதா? என்றும், ஜவுளித் துறையில் நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ள ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என்று ஒன்றிய அரசின் வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜித்தின் பிரசாதா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகத் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:

ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன், இந்திய அரசு, கடந்த ஜனவரி 2026ல் வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இதன் மூலம், இந்திய ஏற்றுமதியில் வளர்ச்சியை பெருக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இந்திய ஆடைகளுக்கும், ஜவுளிப் பொருட்களும் விதிக்கப்பட்டிருந்த 12 சதவீத இறக்குமதி வரியை ஐரோப்பிய யூனியன் நீக்கியுள்ள தால், ஏற்றுமிதியில் வளர்ச்சி வெகு விரைவில் ஏற்படும் என்றும், எனவே பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் துருக்கி போன்ற நாடுகளுடன், இந்திய ஆடை தயாரிப்பாளர்கள் போட்டி போடும் நிலை ஏற்பட்டு உள்ளது என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஓமன் ஆகிய நாடுகளுடன் வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக ஜவுளித் துறையில் நீண்ட கால முதலீடுகள் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு ள்ளது என்றும், வெகு விரைவில் ஆடைகள் மற்றும் ஜவுளிப் பொருட்களின் ஏற்றுமதியில் இந்திய தயாரிப்பாளர்கள் உச்சத்தை தொடுவார்கள் என்று இணையமைச்சர் ஜித்தின் பிரசாதா எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் ஆயுஷ் கல்லூரிகளின் செயல்பாடுகள் என்ன?

## மக்களவையில் – ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, பிப். 13-

இந்திய நாட்டில் மொத்தம் எத்தனை ஆயுஷ் கல்லூரிகள் செயல்பட்டு வருகிறது, குறிப்பாக தமிழ்நாட்டில் மாவட்டம் வாரியாக எத்தனை ஆயுஷ் கல்லூரிகள் தற்போது செயல்பட்டு வருகிறது என்ற விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் புதிய ஆயுஷ் கல்லூரிகளை தொடங்கவோ, அல்லது தற்போது இருக்கும் கல்லூரிகளின் வசதிகளை மேம்படுத்தவோ ஒன்றிய அரசு மத்திய திட்டங்களின் கீழ் இதுவரை ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

இருப்பின் தமிழ்நாட்டில் ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா & நேச்சுரோபதி, யுனானி, சித்தா, ஹோமியோபதி) கல்லூரிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள், அதற்கென ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ள நிதி விவரம் என்ன?



ஆயுஷ் கல்லூரிகளால் பெறப்படும் கல்வி மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் இலக்குகளை நிர்ணயித்துள் ளதா? என்று ஆயுஷ் அமைச்சகத்தின் அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்விடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.



நீலகிரி மாவட்டம் உதகை சிறுவர் மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், தூய்மைப்பணியாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்து, காலை உணவினை வழங்கினார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், உதகை நகர்மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் உள்ளனர்.